2012 ஏப்ரல் 3]

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், மதுரைக்கு அருகில் இருக்கின்ற திருமங்கலத்திலே அரசினர் ஓமியோபதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை 50 படுக்கைகளுடன் உள்நோயாளிகள் தங்கி சிகிச்சை பெறக்கூடிய அனைத்து வசதிகளுடன் இயங்கி வருகிறது. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டுசெல்லப்பட்டு பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவமனையில் தினசரி சுமார் 9,000 நோயாளிகள் வந்து சிகிச்சை பெறுகிறார்கள். திருமங்கலம், உசிலம்பட்டி போன்ற இடங்களில் ஓமியோபதி பிரிவு இருந்தாலும், மாவட்டத் தலைநகர் என்ற வகையில் ஓமியோபதி பிரிவு துவக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள்தொகையின் அடிப்படையிலும், தேவையின் அடிப்படையிலும் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு கனிவுடன் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

40—

விடுதிகள்

***5509—திரு. மு. ராஜநாயகம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி, மணமேல்குடி, சுப்பிரமணியபுரம் ஆகிய இடங்களில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் வாயிலாக மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி, மணமேல்குடி மற்றும் சுப்பிரமணியபுரம் ஆகிய இடங்களில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பில் தலா ஒரு மாணவர் மற்றும் மாணவியர் விடுதி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் சிறப்பாக இயங்கி வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம் அவர்கள்.*

திரு. மு. ராஜநாயகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரணி போற்றும் தங்கத் தாரகை மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களுக்கு கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)*

***[குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*